**O.S. No.355/2019**

**P.W.1 திரு.வெற்றிவேல்**

**Date : 26.07.2023**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறை தலைவராக V.K.நடராஜனும், செயலாளரும் குருசாமி என்ற ஜெயக்கனியும் (என் தந்தை), பொருளாளராக பெரியகருப்பணனும் செயல்பட்டு வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சங்கத்தில் நான் உறுப்பினராக இருந்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, காரணம் உறுப்பினராக இருப்பதற்கு எந்த ஆவணமும் சங்கத்திலிருந்து கொடுக்கமாட்டார்கள். அவ்வாறு நான் சங்கத்தில் நான் உறுப்பினரே இல்லை என்றும் அதனால் தான் நான் உறுப்பினர் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாகமலை புதுக்கோட்டை NGO Colony குடியிருப்பு இந்து நாடார் உறவின்முறையில் நான் உறுப்பினரா என்றால் அப்படி ஒரு உறவின்முறை இருப்பதே எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறை தான் தாவா சொத்தை கட்டினார்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இருக்கிறதா என்றால் பஞ்சாயத்து போர்டு அலுவலகத்தில் உள்ளது. தாவா சொத்திற்கான ஆவணங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் தான் இருக்கிறது என்றும் நான் வழக்கிற்காக ஆவணங்கள் பஞ்சாயத்து போர்டு அலுவலகத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2012 ல் தாவா சொத்தில் நான் அத்துமீறி உள்ளே சென்றதாக என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் செல்வாக்கை பயன்படுத்தி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். தாவா சொத்தில் நான் அத்துமீறி நுழைந்து பல ஆவணங்களை நான் எடுத்துச்சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.1995 ல் நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறை, நாகமலை புதுக்கோட்டை NGO colony குடியிருப்பு நாடார் உறவின்முறையுடன் இணைந்துவிட்டது என்றால்

சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் என்னுடைய கையொப்பம் இல்லை. மேற்படி இரண்டு சங்கங்களும் இணைவதற்கு நான் கொடுத்த ஆட்சேபனை தான் என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான மின்சார கட்டணம், சொத்து வரி ஆகியவை 1ம் பிரதிவாதி சங்கத்தில் இணைந்த பிறகு தான் மின் கட்டணம் மற்றும் சொத்து வரி ஆகியவை ஏற்பட்டது என்றால் சரியல்ல. தற்போது வரை நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறை செயல்படுகிறது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தற்போது வரை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்திற்கான சொத்துவரி, மின்கட்டண ரசீது எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.